06.09.2024

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 20/2019

அ.சா.12

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கௌதம் | | |
| த/பெ | கண்ணதாசன் | | |
| கிராமம் | டி.முதலூர் | தொழில் | |
| தாலுக்கா | திருக்கோவிலூர் | வயது | 26 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பி.இ பட்ட படிப்பு முடித்துவிட்டு வேலை தேடிக்கொண்டு இருக்கிறேன். எடைப்பாளையத்தில் இருந்த அப்துல் ஜபார் என்பவர் வழக்கு சம்மந்தமாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். 2017ம் ஆண்டு ஆடி 18 அன்று திருக்கோவிலூர் ராஜேஸ்வரி பேருந்தில் நான் கல்லூரியிலிருந்து வீடடிற்கு செல்ல உட்கார்ந்த இருந்தபோது அப்போது இரண்டு பேர் யார் என்றே தெரியவில்லை . என்னை வந்து அடித்துவிட்டார்கள். அதன் பிறகு என் அண்ணனுக்கு தொலைபேசி மூலம் போன் செய்து என்னை அடித்து விட்டதாக சொன்னேன். அதன் பின்பு சுபாஷ் என்ற பையன் மட்டும் அங்குஇருந்தார். அங்கிருந்த மற்ற பையன் யார் என்று தெரியவில்லை. நான் என் அண்ணன் சுரேஷ் என்பவரிடம் யார் என்று தெரியவில்லை என்னை அடித்துவிட்டார்கள் என்று சொன்னேன். அதன்பிறகு தான் மற்றொரு பையன் பெயர் கார்த்திக் என்றும், இருவரும் நண்பர்கள் என்று சொன்னார்கள். அதன் பிறகு நானும், என் அண்ணனும் காவல் நிலையம் சென்றுஇது போன்று என்னை அடித்துவிட்டார்கள் என்று சொன்னோம். அது போன்று நாங்கள் சொன்னதற்கு பிறகு காவல் துறையினர் நாங்கள் விசாரித்துவிட்டு உங்களுக்கு சொல்கிறோம் என்று சொல்லி எங்களை அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். தூங்கி எழுந்ததற்கு பிறகுநான் காலையில் கொல்லைக்கு போய்விட்டேன். நான் போனதற்கு

பிறகு என் அம்மா எனக்கு போன் செய்து யார் என்று தெரியவில்லை உன்னை தேடிக்கொண்டிருக்கிறார்கள் இங்கு வரவேண்டாம் என்று என்னிடம் சொன்னார். நான் அது யார் என்ன என்று கேட்பதற்குள் என் அம்மா போனை கட் செய்துவிட்டார். அதன் பிறகு என் அம்மா என்னிடம் இதுபோன்று பாய் வந்திருக்கிறார் நீ வா என்று சொன்னார். நான் அப்புறம் கிளம்பி வீட்டிற்கு போனேன். போனவுடன் ஒரு 5 பேர் என்னை அசிங்கஅசிங்கமாக திட்டி காரில் ஏற்றினார்கள். அப்போது நான் என்ன செய்வது என்றே தெரியாமல் காரின் கேட்டை பிடித்துக்கொண்டு ஏறாமல் மறித்து நின்றுகொண்டேன். அதன்பிறகு பாய் ஆள் இல்லாத வீட்டில் ஏன் இப்படி செய்கீறீர்கள் நான் தான் வந்துவிட்டேனே என்று சொன்னார். திரும்ப என்னை பிடித்து அழுத்தினார்கள். அப்போது பாய் பைக்கை எடுத்து வந்து காருக்கு முன்பு நிறுத்தி என்னை மீறி எடுத்து செல்லுங்கள் என்று சொன்னார். அதற்கு அவர்கள் எதற்கு எங்கள் வழியில் வருகிறீர்கள் நாங்கள் என்ன உங்கள் வழிக்கா வந்தோம் என்று கேட்டனார். அப்போது என்னை காரில் இருந்து இறக்கிவிட்டு நீ எப்போதும் எங்கள் வழிக்கே வருகிறாய் உன்னை ஒரு வழியாக்காமல் விடமாட்டோம் என்று சொல்லிவிட்டு காரை எடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள். அதன் பிறகு என் அம்மாவும் பாயும் என்னிடம் நீ எடைப்பாளையம் கிராமத்தை சேர்ந்த சுபாஷ் என்பவரை உன் அண்ணன் அடித்தார் இல்லையா அவர்களின் ஆட்கள் தான் இவர்கள் என்று சொன்னார்கள். சுபாஷ் மாமா மோகன், சுபாஷ் அம்மா, சுபாஷ் அப்பா, மோகனின் தம்பி ரவி, கார் டிரைவர் செல்வம் ஆகியோர்கள் தான் வந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து பாய் எங்களுக்கு போன் செய்து அவர்கள் என்னிடம் வந்து மன்னிப்பு கேட்டுவிட்டு சென்று விட்டார்கள். அதனால் கேஸ் எதற்கும் போக வேண்டும் என்று என்னிடம் தெரிவித்தார். திருக்கோவிலூரில் நடந்த சண்டை சம்மந்தமாக என்னை காவல் துறையினர் கூப்பிட்டு விசாரித்தார்கள் அப்போது கார்த்திக் மட்டும் அங்கு வந்து எங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டது. அதனால் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டார். என்னை காவல் துறையினர் இது குறித்து விசாரணை செய்தார்கள்.

## <u>1,4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>

திருக்கோவிலூரிலிருந்து என் ஊருக்கும் செல்லும் பேருந்தை எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்றால் 6.30 மணி இருக்கும். நான் அந்த 6.30 மணி பேருந்தில் போகவில்லை.

போலீசார் என் அண்ணன் சுரேஷ், சுபாஷை அடித்தது சம்மந்தமாக ஒரு வாரம் கழித்து விசாரணை செய்தார்கள். என் அண்ணன் சுரேசையும் விசாரித்தார்கள் என்னையும் விசாரித்தார்கள். அப்போது தான் மாணவர்களுக்குள் எதற்கு பிரச்சனை தொடர் நடவடிக்கை வேண்டாம் என்று எங்களிடம் காவல் துறையினர் தெரிவித்தார்கள். நான் எப்போது பி.இ முடித்தேன் என்றால் 2019ல் முடித்தேன். நான் தற்போது வரை நிரந்தரமான வேலைக்கு போகவில்லை. வீட்டில் தகராறு சம்மந்தமாக நான் காவல் துறையில் புகார் அளிக்கவில்லை. போலீசுக்கு தகவல் அளிக்கவில்லை. அப்போது அங்கு இருந்த நபர்களும் காவல் துறையினருக்கு போன் செய்யவில்லை. போலீசார் அங்கு வரவில்லை என்றால் சரிதான். ஒரு வாரம் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அதற்கு பின்பு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. புகார் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை நான் காவல் துறையினர் இடமும் கொடுக்கவில்லை, நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை. போலீசார் என்னிடம் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்லுங்கள் என்று கூப்பிட்டார்கள் நான் வந்தேன்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

2017ம் ஆண்டு ஆடி 18 அன்று நான் பிரயாணம் செய்ததாக சொல்லும் ராஜேஸ்வரி பேருந்தில் பதிவு எண். தெரியுமா என்றால் தெரியாது. அன்று மாலை காவல் துறையில் நான் புகார் கொடுத்தேனா அல்லது என் அண்ணன் புகார் கொடுத்தாரா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். எழுத்துமூலமாக புகார் கொடுத்தார். அந்த புகார் வாங்கியதற்கு காவல் நிலையத்தில் ரசீது கொடுத்தார்களா என்றால் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை. இது குறித்து என்னையும் , என் அண்ணனையும் காவல் துறையினர் விசாரணை செய்தார்கள். அது போன்று பேருந்தில் வந்தபோது அடித்துவிட்டார்கள் என்பது சம்மந்தமாக நான் அப்துல்ஜபாரிடம் தகவல் சொன்னேனா என்றால் தகவல் சொன்னேன். என்னை யார் அடித்தது என்பது குறித்து அப்துல்ஜபார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல ஒரு சம்பவம் 2017ம் ஆண்டு ஆடி 18 அன்று நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நடந்தது. அப்துல்ஜபார் இறந்தது சம்மந்தமாக திருவெண்ணைநல்லூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்தார்கள். என்னை சுபாஷ் அடித்தது சம்மந்தமாக திருக்கோவிலூர் காவல் நியைலத்தில் நான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்ததாக சொல்லும் புகாரை திருவெண்ணைநல்லூர் காவல் துறையினர் கேட்டு

வாங்கிகொண்டார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அது போன்று ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்றும், அதை வாங்கி காவல் துறையினர் என்னிடம் காட்டி விசாரித்து இருப்பார்கள் என்றும் அதுபோன்ற சம்பவமே நடக்கவில்லை என்பதால் தான் காவல் துறையினர் புகாரை கேட்டு வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா நான் வயல் வெளிக்கு சென்றபோது போன் செய்த நேரம் சுமார் காலை 7 மணி இருக்கும். திரும்ப என் அம்மா ஒரு 10, 15 நிமிடத்திற்குள் போன் செய்து வா என்று சொன்னார். நான் என் வீ,ட்டிற்கு சென்ற போது அங்கு நிறைய பொதுமக்கள் கூடியிருந்தார்கள். அப்துல் ஜபார் வந்து வண்டியை நிறுத்தி மறித்ததாக கூறும் சம்பவம் நான் வந்ததற்கு பிறகு 20 நிமிடம் கழித்து நடந்தது. என்னை காரில் உள்ளே தள்ளியது சம்மந்தமாக நானோ, அப்துல்ஜபாரோ அல்லது என் தாயாரோ காவல் நியைலத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். அப்துல் ஜபார் மேற்படி சம்பவம் தொடர்பாக வீட்டிற்கு வந்தபிறகு சுமார் 1 வருடம ் கழித்து இறந்துவிட்டார். அப்துல்ஜபார் இறந்தது சம்மந்தமாக எழுத்துபூர்வமாக எனக்கு அழைப்பாணை எதாவது வந்ததா என்றால் இல்லை. வீட்டில் வந்து விசாரித்தார்கள். அவர் இறந்தபிறகு 20, 25 நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது அதிகாரிகள் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். அதை படித்து பார்த்து தான் நான் கையெழுத்து போட்டேன். நான் சொன்னது போல ஆடி 18ல் அதுபோன்ற சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், அப்துல்ஜபார் இறந்தது சம்மந்தமாக எதிரிகளை சிக்கவைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அப்துல்ஜபாருக்கு நெருங்கியவர்களான என்னையும், என் அம்மாவையும் இந்த வழக்கில் காவல் துறையினர் சாட்சியம் சொல்ல வைத்துள்ளனர் என்றால் சரியல்ல.

**3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

**3,5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை**

**இல்லை.**